Downloaded From : http://www.cbseportal.com



# மாதிரி வினாத்தாள் - 2018-19
# SAMPLE QUESTION PAPER - 2018-19

பன்னிரண்டாம் வகுப்பு — மொத்த மதிப்பெண்கள்: 100
(XII - STD) — Maximum marks : 100
தமிழ் — கால அளவு: 3 மணி நேரம்
TAMIL — Time Allowed : 3 Hours.

....................................................................................................

**பகுதி -அ (50 மதிப்பெண்கள்)**
**SECTION-A (50 Marks)**

1. **அ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:** **(5x1=5)**

(i) உணவை உறிய நேரத்தில் உன்பது மிகவும் நல்லது.
(ii) குரைந்த விலையில் நள்ள பொறுள்களைப் பார்த்து வாங்களாம்.
(iii) சிருதுலி பெறு வெல்லம்.
(iv) உளவும் நெசவும் நமக்கு இரு கன்கள்.
(v) உன்மையைச் சொல்லி நண்மையைச் செய்வோம்.
(vi) மன்னின் மணம் மாறாமல் வால்பவர்கள் மண்ணின் மைந்தர்கள்.
(vii) கற்றோர்க்குச் சென்ற இடமெள்ளாம் சிரப்பு.

**ஆ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக.** **(5x1=5)**

(i) சில உவமைகளை கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் மிக்க நயமுண்டாக குறள் அமைத்திருக்கிறார்.
(ii) மர சிற்பகலை கி.பி.15ஆம் நூற்றாண்டில் இருந்தே காணப்படுகிறது.
(iii) கடைக்கு சென்று புத்தகங்கள் வாங்கி வா!
(iv) அக்காலத்து மக்கள் இல்வாழ்க்கையை பெரிதும் விரும்பியிருந்தார்கள்.
(v) எதையும் எழுதி பழக வேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.
(vi) தமிழ்நாட்டு கலைசெல்வங்கள் மிகவும் பெருமைக்குரியவை.
(vii) தனித்தனி குன்றுகளை செதுக்கி கோயிலாக்கும் முறை பல்லவர், பாண்டியர் காலத்தில் இருந்திருக்கிறது.

**இ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக.** **(5x1=5)**

(i) மாணவர்கள் அறிவுத்தாகத்தால் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கின்றனர். (பொருள் மாறாமல் எதிர்மறைத் தொடராக்குக)
(ii) அவன் மாலையில் விளையாடுவான் (பிறவினையாக்குக).
(iii) காந்தியடிகள் சத்தியசோதனை என்ற புத்தகத்தை எழுதினார் (செயப்பாட்டு வினையாக்குக).
(iv) நல்ல சிந்தனைகளை மேம்படுத்துவது அவனுக்கு மட்டுமே உள்ள அடிப்படை உரிமையாகும் என்பது அவன் எண்ணம் (நேர்க்கூற்றாக்குக).

Downloaded From : http://www.cbseportal.com Courtesy : CBSE

Downloaded From : http://www.cbseportal.com



(v) தொலைதொடர்புக் கருவிகளால் எவ்விதப் பயனுமில்லை (உடன்பாடாக்குக).
(vi) "இளமையில் கல்வி கற்பதைவிட வேறென்ன நற்பயன் இருக்க முடியும்?" என்று தாத்தா அறிவுரை கூறினார் (அயற்கூற்றாக்குக).
(vii) உலக மக்களால் திருவள்ளுவர் போற்றப்பட்டார் (செய்வினையாக்குக).

**2. (அ) பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளி. (5x2=10)**

தந்தை மகனுக்குக் கூறிய அறிவுரை:

நம் மனநிலை எப்போதும் அமைதியாக இருக்க வேண்டும்; இருக்கப் பழக வேண்டும். நம் நண்பர்கள், மற்றவர்கள், மற்ற நிகழ்வுகள் நம்மை வருத்தப்படுத்தினாலும், நாம் அமைதியை இழக்கக்கூடாது. நாம் எந்த சூழ்நிலையிலும் அமைதியாக இருந்துவிட்டால், கோபத்தை வென்று விடலாம்.

அமைதியாக, மெதுவாக பேசுவதன் மூலமே நாம் மற்றவர்களை வெற்றி காண முடியும். நம் உறவுகளை தக்க வைத்துக் கொள்ள முடியும். நல்ல நண்பர்களைப் பெறமுடியும்.

"சினம்என்னும்சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

என்கிறது திருக்குறள்.

கோபம் வேண்டாம், என் மகனே! உனக்கு கோபம் வேண்டாம். அது சேர்ந்தாரைக் கொல்லி. அது உன் மகிமையைக் கெடுத்துவிடும்; வளர்ச்சியைத் தடுத்துவிடும்; உன்னைத் தனிமைப்படுத்தும்; உன்னையே அழித்துவிடும்.

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என்கிறார் திருவள்ளுவர்.

கோபத்தைக் கட்டுப்படுத்த, வென்றுவிட முயற்சி செய்; கோபம்வரும்போது, பேச்சைத் தவிர்த்து, மௌனமாகிவிடு; அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடு; அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்று விட்டாலே, புதிய இடத்தில், மாற்றுச் சூழ்நிலையில் மனம் அமைதியை நோக்கி நகரும்; கோபம் போய்விடும்.

என்மகனே! மனதில் உறுதி கொள். இன்றே, இப்போதே முயற்சியை ஆரம்பி; பயிற்சிகளை மேற்கொள்; மனப்பயிற்சியே வெற்றி தரும்; இது முதலில் உன் வீட்டில் ஆரம்பிக்கட்டும். முதலில், நீ வீட்டில் நல்ல பெயர் எடுக்க வேண்டும்; வீட்டில் நல்ல பெயர் எடுக்காமல், வெளியே நல்ல பெயர் வாங்கி என்ன பயன்?

**வினாக்கள்:**

(i) கோபத்தை நாம் எவ்வாறு வெல்ல முடியும்?
(ii) மற்றவர்களை வெற்றி காண்பது எப்படி?
(iii) நல்ல நண்பர்களை இழந்து விடுவோம் என்பதற்கான வள்ளுவர் கூறும் குறள் யாது?
(iv) கோபத்தினால் ஏற்படும் தீமைகள் யாவை?
(v) இப்பத்தியில் குறிப்பிடப்படும் நற்செயல்கள் யாவை?

Downloaded From : http://www.cbseportal.com Courtesy : CBSE

Downloaded From : http://www.cbseportal.com



**(ஆ)** காடுகளின் வளம் அழிந்து நகரமைப்பு தோன்றுவதால் ஏற்படும் இன்னல்களைப் பற்றி வனத்துறை அதிகாரி ஒருவரிடம் நேர்காணல் செய்க. **5**

(அல்லது)

**பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.**

தாராள மனப்பான்மை என்று சொல்லித்
  தண்ணீர்போல் பணத்தையெலாம் செலவு செய்தல்
தீராத வறுமைக்கு வித்தாம்; வாழ்வில்
  சிக்கனந்தான் ஒருவனுக்குச் சிறந்த சொத்தாம்
சீராகச் செட்டாக ஒவ்வோர் நாளும்
  சிக்கனமாய்ப் பெரியார்போல் வாழ்ந்து வந்தால்
பாறாங்கல் மீதில் விழும் மழைநீர் போலப்
  பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும்.

**வினாக்கள்:**

(i) நாம் பணத்தை எவ்வாறு செலவு செய்தல் கூடாது?
(ii) ஒருவனுக்குச் சிறந்த சொத்து எது?
(iii) பெரியாரின் சிறப்பு யாது?
(iv) நாம் துன்பமின்றி வாழ வழி யாது?
(v) இப்பாடலுக்குத் தகுந்த தலைப்பு ஒன்று எழுதுக.

**3. <u>கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக.</u>** **1x10=10**

(i) கல்வி கரையில.
(ii) நெசவுத் தொழிலின் மேன்மை
(iii) தொழில்நுட்பக் கருவிகளின் அவசியம்.

**4. <u>பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.</u>** **1x10=10**

உங்கள் பகுதியில் சுகாதாரமற்ற நிலையில் குப்பைகள் மண்டிக் கிடப்பதையும் அப்பகுதியைத் தூய்மை செய்து தொற்றுநோய்கள் பரவாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டியும் சென்னை மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

உங்கள் ஊரில் நடைபெற்ற விளையாட்டு விழா குறித்து வெளியூரில் தங்கிப்படிக்கும் உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
(எக்கடிதமாயினும் நும் முகவரி: எண் 11, மாறன் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை-5.)

## பகுதி -ஆ (50 மதிப்பெண்கள்)
## SECTION-B (50 Marks)

**5. <u>கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி</u>** **(2x10=20)**

(i) கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளை எழுதுக.

(ii) தமிழ் - உயர்தனிச் செம்மொழி" என்ற தலைப்பின்கீழ் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

Downloaded From : http://www.cbseportal.com Courtesy : CBSE

Downloaded From : http://www.cbseportal.com



(iii) நீதி கூறும்போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுடன் விளக்குக.

(iv) இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக நும் பாடப்பகுதியில் வரும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**6. கீழ்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.** **5**

நண்ணு மிளமைப் பருவத்தி லேமுதல்
நாவை யசைத்தமொழி - எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்
கருத்தோ டிசைத்தமொழி

**வினாக்கள்**

(i) இப்பாடல் வரிகள் எத்தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?

(ii) இதில் குறிப்பிடப்படும் தாய்மொழி எது?

(iii) நண்ணும் - பொருள் தருக.

(iv) தாய்மொழியின் சிறப்பு யாது?

(v) இப்பாடல் ஆசிரியர் யார்?

(அல்லது)

யாருமில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ

**வினாக்கள்**

(i) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?

(ii) பொய்த்தவர் யார்?

(iii) யானெவன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

(iv) இப்பாடல் இடம்பெற்ற திணை - எழுதுக.

**7. <u>கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி</u>** **(2x5=10)**

(i) இராவணன் வருகையும் அதன் பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களை அனுமன் கூற்றாக எடுத்துக் கூறுக.

(ii) அ) புறநானூறு - ஆசிரியர் குறிப்பு எழுதுக.
ஆ) நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

(iii) மருண்மாலைப்போதில் கண்ணகி இனைந்து ஏங்கி உரைத்தனவும் கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.

(iv) பொறையுடைமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?

**8. துணைப்பாடக் கட்டுரை எழுதுக** **10**

பால்வண்ணம் பிள்ளை (அல்லது) சட்டை

**9.** வேலி என்ற சிறுகதையின் மூலம் மாலதி என்ற பெண்ணின் பாத்திரப் படைப்பை ஆய்க. **5**

(அல்லது)

மூக்கப்பிள்ளை - பாத்திரப்படைப்பை ஆய்க.

--ooOoo--

Downloaded From : http://www.cbseportal.com Courtesy : CBSE